அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

*அ.எண்:102/2016*
*தேதி:11.06.2016*

# தொடரும் தமிழக மீனவர்கள் வேதனைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்

# பிரதமருக்கு சமக நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வேண்டுகோள்

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்படுவது ஒரு தொடர்கதையாகவே இருந்து வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்க கோரி வலியுறுத்தி கடிதங்கள் பல எழுதியும், மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்காதது மிகுந்த வருத்தத்தையும், வேதனையையும் அளிக்கிறது.

மே மாதம் 29 ஆம் தேதி 45 நாள் மீன்பிடி தடை காலம் முடிந்த கையோடு மிகுந்த உற்சாகத்துடன் கடலுக்கு சென்ற மீனவர்கள், அந்த உற்சாகத்தை சிதைக்கும் வகையில் கடந்த 10 தினங்களில் அடைந்திருக்கும் துன்பத்திற்கும் துயரத்திற்கும் இந்திய அரசு உடனடியாக தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்கள் வாழ்வாதாரம் தொடர்ந்து ஆபத்தான சூழலில் சிக்கியிருப்பதை தடுத்து நிறுத்த பிரதமர் தலையிட்டு முடிவு காண வேண்டும்.

கடல்கடந்து பலநாடுகளில் இந்தியாவின் பெருமையை நிலைநாட்ட முயற்சிக்கும் பாரத பிரதமர், இந்தியாவின் வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கும் தமிழகத்தின், நீண்ட நாள்களாக தீர்க்கப்படாத மீனவ பிரச்சனை, இந்திய நாட்டின் பிரச்சனை என்பதை கருத்தில் கொண்டு, எதிர்கால மீனவ சமுதாயத்தின் மேல், அவர்களின் வளர்ச்சியின் மேல் அக்கறை கொண்டு தகுந்த தீர்வை நல்க ஏற்பாடு செய்யவேண்டும். கடல் சார்ந்து வாழும் லட்ச கணக்கான மீனவ சகோதரர்களும் அவர்கள் குடும்பத்தினரும் மன உளைச்சலில் இருந்து நிரந்தரமாக விடுபடுவதற்கு உதவ வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்

நன்றி , வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர் சரத்குமார் B Sc.
நிறுவனர் - தலைவர் - அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி